உ

திருச்சிற்றம்பலம்

திருக்கைலாய பரம்பரைத்

தருமபுர வாதீனஸ்தாபனாசார்ய வர்ய

ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# சோடசகலாப் பிராசாத சட்கம்

மூலமும் பழைய உரையும்

இவை

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்
சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் ஆக்ஞைப்படி

வைத்தீசுவரன் கோயில்
சோமசுந்தர தேசிகர் அவர்கள்
எழுதிய முகவுரையுடன்,

ஷை ஆதீன வித்வான்

காழி, ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை
அவர்களால்

இம்பீரியல் பிரின்டிங் அச்சுக்கூடத்திற்
பதிக்கப்பட்டன.

rights reserved] 1931. [500 Copies.

# PREFACE.

The Saiva Siddhanta is an expression of the true meaning of the great Upanishads. It is the substance of the Jnana-pada of the Saiva Agamas. It is a universal religion. It is a practical philosophy. It is a code of ethics supremely reasonable. It is a system of theology so unique in revelation that it appears perfectly natural and in consonance with common-sense. Not only is it all these, it is a comprehensive explanation of the true mystic experiences of such long successions of Siva-Jnanis that it represents a well-established spiritual tradition. The great souls that have attained realisation along this Siddhanta path have set down their own experiences as also the secrets that their Gurus had revealed to them during Upadesa in various treatises as helps to their own disciples according to the capacity and progress of the latter. These treatises may be big or small in size but as far as the subject matter is concerned they are all of equal worth and importance to the seeker after truth. One such treatise is Prasada Shatkam.

The word "prasada" signifies a palace, mansion, temple or shrine. It is also the name of the consecrated precincts where the Guru who teaches Jnana-sadhana and his disciples meet during periods of spiritual instruction and contemplation. There would be a throne for the Guru and seats arranged at varying distances for the disciples according to their spiritual progress. Desks or boxes would be provided to keep the sacred books. Such apartments go under the name of prasada-kattam and can be seen in the Saiva mutts even to this day. Corresponding to the outer parts of a prasada, there are centres in the body which are of yogic significance and

they are also collectively known as prasada. There are mystic syllables called prasada mantra mentioned in the Saiva Agamas. These are used for the realisation of Jnana-anubhava and also in the fires that are lit in Jnana-pùja.

Siva-dharma and Marga are fourfold: namely, *charya*, *kriya*, *yoga* and *jnana* and each of these is subdivided into four stages. After having undergone the discipline of the kriya in kriya stage, the initiated Saivite enters the Yoga-in-kriya stage. To such a person, the way of the prasada becomes indispensable. The prasada marga is in its turn of two divisions: One consists in the contemplation of the union of the soul with Siva when the involution of the Atma tattva in Prakriti, Vidya-tattva in Maya and Siva-tattva in Suddha-maya is realised. The other division of the marga is marked into five, eight, ten, twelve or sixteen kalaprasadas, according to the different Saiva-paddhatis. All these are elaborated as the significance of the inner dance of Sri Panchakshara and treated in many books in Sanskrit and Tamil.

Prasada Shatka, which is one of such books in Tamil was written by Guru Sri Jnanasambandha Swamigal, founder of the Dharmapuram Mutt.

It is here published in obedience to the orders of Sri Subrahmanya Desika Swamigal of the Dharmapura Adhinam, for the use of Sadhus.

Shiyali,
22-5-31

P. A. MUTHUTHANDAVARAYAN

திருச்சிற்றம்பலம்

# பிராசாத சட்க முகவுரை

திருக்கைலாய கிரிக்கிறையாகிய எண்ணுதற் கரிய கண்ணுதற் பாமன் எம்மனோர்க் கருளுருமியல்பினை நாடி, மின்மிளிர் சடைமுடி விளங்கித் தோன்ற, புலி, தோல்* உடைகள் பொருத்தமின் றென்று கல்லாடை தன்னைக் கவினுறத் தரித்து, சர்ப்பா பரணந் தன்னை நீத்து, தக்கருத் திராக்கஞ் சாந்தநீ றணிந்து, மானைக் காட்டி மான் பிடிப்பது போல் மானிட வடிவாய் வந்தவ தரித்துத் தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலுந் திருநகராக வாசு வீற்றிருந்த திருக்கைலாய பாம்பரைத் தருமை ஆதீனத்துப் பரமாசாரியர், திருவடி தொழுந் திருக்கூட்டத்தி னருள்ளும், பத்தர்கள் பணிவிடைக் காரருள்ளும், மாணவர் தம்மினும் மற்றையோர் தம்மினும், நான்கு தாமும் நன்காராய்ந்தவர், ஈன சம்பந்த மெளிதினி லொழிக்கும் சுத்தாத்துவித சைவசித்தாந்த சற்குரு ஞான சம்பந்த சிகாமணி அருளிச் செய்த வருந்தமிழ் நூல் பல, அவற்றுள், பிராசாத சட்க மெனும் பெயர்த்திதுவே.

இந்நூல் பிராசாதத்தின் பெருமை முற்றும் ஆறு செய்யுளின் அடக்கி யுரைத்தமையின் பிராசாத சட்கம் என்னும் பெயர்த்து. பிராசாத சட் சுலோகி என்னும் முதனூற் பெயரொடு பொருந்தப் பெற்றது. இதனுள் ஏழு செய்யுள் காணப்படுதலின் சட்கமெனக் கூறுமா றெங்ஙன மென்னிற் கூறுதும். மந்திரம் பொருந்திய ஆறு செய்யுளும் நூலாமென்றும், மந்திர மின்றி மாத்திரை சூனிய மட்டுங் கூறிய

*தோல் - யானை.

செய்யுள் சட்கத்துட் சேராத் தனிச் செய்யுளா மென்றுங் கோடலே சால்பா மென்க. சட்கம் என்றது ஆறென்னும் எண்ணுப் பெயர் குறித்து நிற்றலின் ஆறு செய்யுளான மைந்த நூலெனவும், ஆறென்னுந் தொகைப் பொருட் பெயரைக் குறிக்கும் நூல் எனவும் பொருள்படுமாறு மறிக.

பிராசாத மென்பது பிரா-சிவஞானம், ஸா-கதி, தம்-தருவது ; எனவே சிவஞான கதியாகிய மோட்சத்தைத் தருவதென்னும் பொருட்டு. இது பிராசாத கோசர முதல் பிராசாத விருதய மீறாக இருபத்துநான்கு* வகைத்தாம். இவ்விருபத்து நான்கனுள் இந்நூல் பிராசாத மந்திரத்தின் பிரபாவமே சொல்லுதற் கெழுந்த தென்க. இப்பிராசாதம் கலா பேத வகைகளால் பஞ்சகலாப் பிராசாதம், அஷ்டகலாப் பிராசாதம், நவகலாப் பிராசாதம், துவாதசகலாப் பிராசாதம், சோடசகலாப் பிராசாதம் என்று, ஐவகைத்தாம். அவற்றுள் முதன் மூன்றனையும் ஒழித்தொழிந்த துவாதசகலாப் பிராசாதம், சோடசகலாப் பிராசாதம் என்னு மிவ் விரண்டுமே நங்குரு ஞானசம்பந்த சுவாமிகளாற் கொள்ளப் பட்டன. இவற்றுள் துவாதசகலாப் பிராசாதம் நான்கு வகைப்படும் : அவை தூலம் சூக்குமம் அதிசூக்குமம் மகா சூக்குமம் என்

---

*க. பிராசாத கோசரம் உ. பிராசாத சுந்தரம் ௩. பிராசாத சேகரம் ச .பிராசாத ஸௌரம் ரு. பிராசாதம் சு. பிராசாத பெந்தனம் எ. பிராசாத புசங்கம் அ. பிராசாத சந்திரம் கூ. பிராசாத கமலம் ம. பிராசாத வித்தியாதரம் கக. பிராசாத காந்தம் கஉ. பிராசாத விக்ஞானம் க௩. பிராசாத சிந்தாமணி கச. பிராசாத தீபகம் கரு. பிராசாத கமலானந்தம் கசு. பிராசாத புவனம் கஎ. பிராசாத மஞ்சரி கஅ. பிராசாத கவசம் ககூ. பிராசாத ரத்ன கவசம் உம. பிராசாத கௌஸ்துபம் உக. பிராசாத பூஷணம் உஉ. பிராசாத குண்டலம் உ௩. பிராசாத சூத்திரமணி உச. பிராசாத இருதயம் என்பனவாம்.

பனவாம். சோடசகலாப் பிராசாதத்திலுள்ள கலைகளின் வடிவம், நிறம், நொடிக்காலம், உபாசனைக் கிரமம், மந்திரோச்சாரணக் கிரமம், தியானம் இவைகளைக் குருமுகமாகக் கேட் டுணர்ந்து சாதனை முற்றியபின் வியாபினிக்கும், சமனைக்கும் நடுவே வியோம ரூபினி, அனந்தை, அனுதை, அனுசிருதை என்னு மிந் நான்கனையு மறியுமா றறிந்து அடக்குமா றடக்குமுகத்தால் துவாதசகலாப் பிராசாதமே மிகு சிறப்பாமெனக் கூறியவா றுங் காண்க.

இனி, வித்தியா தத்துவத்துள் மாயை யொழிந்த காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன் என்னும் தத்துவங்க ளாறும்; அகார கலை, உகார கலை, மகார கலை, விந்து கலை, அருத்தசந்திர கலை, நிரோதி கலை என ஆதார கலைகள் ஆறும்; நாத கலை, நாதாந்த கலை, சத்தி கலை, வியாபினி கலை, சமனை கலை உன்மனை கலை என நிராதார கலைகள் ஆறும்; அக்கினி ஒளி,† சூரிய சந்திரர் ஒளி, மின்னொளி, விளக் கொளி, வாளொளி, மாணிக்கத்தின் ஒளி என ஒளி நெறிகள் ஆறும்; மகார கலை, நிரோதி கலை, சத்தி கலை, வியாபினி கலை, சமனை கலை, உன்மனை கலை எனக் கலைகள் ஆறன் மேலுள்ள சூனியங்கள் ஆறும் என்றறு வகையாற் கூறப்படும் பொருள்கள் பல இதனு ளடங்குமா று மறிக.

துவாதச கலைகளை ஆறு கூறாக்கி அவ்வாறு கலைகளும் மூலாதாரம் ஒன்றும் ஆகிய இவ்வே ழிடங்களிலும் பொருந்திய *காமிக முதல் ஆணவ மீறாகவுள்ள மலங்களைச் சோ

---

†ஓரானீழலொண் கழலிரண்டும் முப்பொழுதேத்திய நால்வர்க் கொளி நெறி காட்டினை எனத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்த திருவெழு கூற்றிருக்கை இங்கே சிந்திக்கற் பாற்று.

*காமிகம் என்பதன் றிரிபு காமியம். கார்மியம் கன்மம் என்பன ஒரு பொருட் கிளவி.

திக்கும்போது அங்குள்ள தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் முதலிய எழு வகைப் பிறப்பும் எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதமுஞ் சோதனைப்பட்டு, பிறவி† யொழிக்கும் பெருநெறி கூறி நூற் பெருமையும் நுண்ணிதி னறியுமா றுணர்த்தியதூஉங் கண்டு கொள்க,

இதனுட் கூறப்படும் சோடச கலாப் பிராசாதத்தினைக் குருவருளாற் பெற்று ஒன்றி ரண்டு மூன்று முதலிய கலைக ளிற் பயில்வோர் முறையே ஒன்றிரண்டு மூன்றும் ஒடுக்கத் தில் ஒருவர் இருவர் தனித்துஞ் சேர்ந்தும் இவ்வாறு சோட சாந்தம் வரை சோபானக் கிரமமாய்த் திருக் கூட்டத்துச் சிவ ஞான யோகிகள் பலர் இருந்து நிட்டை புரிந்த தானமே பதினாறொடுக்க மென்று சொல்லப்படும். இதனை யிவ்வாதீ னத்து ஸ்ரீ சொக்கநாத சுவாமியின் பூஜாஸ்தானத்தின் வடக் குப் பிராகாரத்துள் இன்றுங் காணலாம்.

மேற்கூறிய அற்புத நெறிகள் பற்பல வமைந்ததும் கலை களான் நிரம்பப் பெற்றதும், சாக்கிரத்தே துரியா தீதத்தைப் புரியும் முத்தியுபாயங் கூறப்படுவது மாகிய இந்நூற் பெரு மை ஒன்றுக்கும் பற்றாத வென்றாற் கூறப்படுவதன்றாயினும் பேயினைப் பிரமமாக்கிப் பிஞ்சினைப் பழமதாக்கும் ஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள் சந்தானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் திருவரு ளூக்கத்தால் இம் முகவுரை யெழுதத் துணிந்தேன்.

இங்ஙனம் :

**சோமசுந்தர தேசிகர்**

வைத்தீசுவரன்கோயில்

---

†ஆசிரியர் தாமருளிய சிவபோக சாரம் அறியும் பகுதியுள் பிறவி யொழிக்கும் உபாயம் கூறிய நனவாதி யந்தத்து நாடு சுகந் தன்னை என்ற செய்யுள் இங்குச் சிந்திக்கற்பாற்று.

# சிறப்புப்பாயிரம்

---

தெள்ளு தெண்டிரை சுலாவிய செழும்புவி தேத்துத்
துள்ளு மெம்முளந் திருவருட் சூழலிற் சூழ
மெள்ள நற்பதம் வைத்தெமை யாண்டிடும் விமல
ரொள்ளி யோருறை தருமையம் பதியம ருரவோர் (க)

மாத வத்தவர் சுப்பிர மணியமெய்க் குரவர்
காத லுற்றிட வருபிரா சாதமெய்க் கலையை
யோதி யின்புற வுதவினர் வாழிய வுவப்பாம்
நாத மெய்ப்புக ழருணந்தி நாமநன் முனிவர். (உ)

இந்த மெய்க்கலை யோதலிற் பயனென்னை யென்னின்
மந்த மாணவ ருயிரான் மாட்டியோ சித்துத்
தந்த மாபரன் குணங்களை யவர்வயிற் சார்த்தி
முந்து மப்பா ணுக்குவித் திடுதலே மொழியின். (ங)

பரந்த மந்திர முதலைந்துங் கலையைந்திற் பகுத்துச்
சுரந்தி டாதவக் கலைகளை நன்குசோ தித்துச்
சுருங்க வில்லுயிர்க் கிரகித்துச் சோதியி னொடுக்கி
நிரந்த ஷட்குண மதன்குண மாகவே நிறுத்தி (ச)

ஆதி யானந்த மேலிட வநுபவத் தமைத்து
நீதி முப்பொரு ளியல்பினை நெறிப்பட நிகழ்த்தி
வாதி யாமலம் மலத்தினை வாட்டியவ் வாய்மை
சாதி ஞானத்தை விளக்குவிக் கும்பிரா சாதம். (ரு)

ஸ்ரீகாழி,
26-6-30



ப. அ. முத்துத்தாண்டவராயன்.

உ

குருபாதம்

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீன ஸ்தாபனாசார்ய வர்ய ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

# சோடச கலாப் பிராசாத சட்கத்தின் படம்.

| நெ. க | கலைகள். உ | விவரம். ௩ | தானம். ௪ | அளவு ௫ | வடிவம். ௬ | தேவதை. ௭ | குணம். ௮ | மலநிலை. ௯ | சோதனை. ௰ | மாத்திரை. ௰க | இலக்கம் ௰உ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௰௬ | உன்மனை | இருள் போலிருக்கும் | நிராதாரம் | க" |  | அநாகத சிவம் | மகா சூக்கும கலைகள் | ஆணவ மலம் | தெய்வ யோனி பதினொரு இலக்கம் | கூ·சூகூரு | $\frac{1}{8192}$ |
| ௰௫ | O சமனை | இலக்கம் கோடி சூரிய வெயில் | | ௩" | | | | | | [illegible] | $\frac{1}{4096}$ |
| ௰௪ | அநாசிருதை | இலக்கம் கோடி பூர்ண சந்திரப்ரபை | | | | | | | | கூஉளுசூ | $\frac{1}{2048}$ |
| ௰௩ | அநாதை | ஞானக்கண்ணாடி | | |  | பரம சிவம் | | | | [illegible] | $\frac{1}{1024}$ |
| ௰௨ | I அநந்தை | ஞானவாரி | | | | | | | | கூ ரு ளு | $\frac{1}{512}$ |
| ௰௧ | வ்யோம ரூபினி | ஞானாகாயம் | | | | | | | மானிட யோனி ஒன்பது இலக்கம் | ஒதகூவ | $\frac{1}{256}$ |
| ௰ | × O I வியாபினி | நூறுயிர கோடி சூரியவட்டப்ரபை | | ௪" |  | ஆகத சிவம் | அதிசூக்கும கலைகள் | திரோத மலம் | | [illegible] | $\frac{1}{128}$ |
| ௯ | O × சக்தி | நூறுயிர கோடி சூரியஉதய காலப்ரபை | | ௪" |  | | | | | [illegible] | $\frac{1}{64}$ |
| ௮ | நாதாந்தம் | இருமின்னற்ப்ரபை | உச்சியின்பின் | ௩" |  | சதா சிவம் | சூக்கும கலைகள் | சுத்தமாயை | நாற்காலியான யோனி பத்து இலக்கம் | சல | $\frac{1}{32}$ |
| ௭ | நாதம் | மாணிக்கப்ரபை | உச்சி | ௩" | | | | | | [illegible] | $\frac{1}{16}$ |
| ௬ | O நிரோதினி | புகை நிறம் | நெற்றி மேல் பாகம் | ௩" | △ | | | மாயேயம் | பறவையான யோனி பத்து இலக்கம் | ளு | $\frac{1}{8}$ |
| ௫ | அர்த்தசந்த்ரன் | வாளின்ப்ரபை | நெற்றி நடு | ௩" |  | | | | | வ | $\frac{1}{4}$ |
| ௪ | விந்து | விளக்கின்ப்ரபை | புருவமத்தி | ௮" | O | மகேச்வரன் | ஸ்தூலகலைகள் | அசுத்த மாயை | நீர்வாழ் சாதியான யோனி பத்து இலக்கம் | ரு | $\frac{1}{2}$ |
| ௩ | O மகாரம் | மின்னற்ப்ரபை | கண்டம் | ௮" | ம | உருத்திரன் | | | | க | 1 |
| ௨ | உகாரம் | சந்திர சூரியப்ரபை | இருதயம் | ௮" | உ | விஷ்ணு | | ப்ரகிருதி மாயை | ஊர்வனவான யோனிபதினைந்து இலக்கம் | உ | 2 |
| ௧ | அகாரம் | அக்கினிக் கொழுந்து | நாபி | ௪" | அ | ப்ருஹ்மா | | | | ௩ | 3 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.



திருக்கைலாய பரம்பரைத்

தருமபுரவாதீன ஸ்தாபனாசார்ய வர்ய

ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

# * சோடசகலாப் பிராசாத சட்கம்.

## கலைகளின் வன்னமும் தானமும் கூறியது.

நற்றழலின் கொழுந்துபய கதிர்மின்னு விளக்கு
    நண்ணும்வா ளொளிபுகைமா ணிக்கமிரு மின்னு
வுற்றொளிரு மிரவிநூறு யிரகோடி யுதய
    வொளியன்ன தொகைவட்ட ஞானா காய
மற்றமில்ஞா னவ்வாழி ஞானக்கண் ணாடி
    யவிர்நூறு யிரகோடி மதியொளியத் தொகையே,
பெற்றதின கரவெயில்மேற் பேசவரு மிருளே
    பிறங்குந்தி முதல்முடிமேற் றுவாதசாந்தம் பெறுமே ()

'நற்றழ்லின் கொழுந்து'-நாபித் தானத்திலே யுள்ள அகார கலையானது அக்கினிக் கொழுந்து போன்றிருக்கும்; 'உபயகதிர்'-

---

* சோடசகலாப் பிராசாத விருத்தம் என்னும் பெயர் பெறும்.

வன்னம்—நிறம்.

இருதயத் தானத்திலுள்ள உகார கலையானது சந்திர சூரியருடைய பிரபை போன்றிருக்கும் ; 'மின்னு'-கண்டத்தானத்திலுள்ள மகார கலையானது மின்னற் பிரபை போன்றிருக்கும் ; 'விளக்கு'-புருவ மத்தியிலேயுள்ள விந்து கலையானது ஒரு விளக்கின் பிரபை போன்றிருக்கும்; 'நண்ணும் வாளொளி'-நெற்றியி னடுவேயுள்ள அர்த்த சந்திர கலையானது வாளினை விளக்கி வெயிலிலே வீசும் பொழுதுள்ள பிரபை போன்றிருக்கும் ; 'புகை'-நெற்றியின் மேலுள்ள நிரோதினி கலையானது புகை நிறம் போன்றிருக்கும் ; 'மாணிக்கம்'-உச்சியிலே யுள்ள நாத கலையானது மாணிக்கத்தின் பிரபை போன் றிருக்கும் ; 'இருமின்னு'-உச்சியின் பின்னேயுள்ள நாதாந்த கலையானது இரண்டு மின்னலினுடைய பிரபை போன் றிருக்கும் ; 'உற்றெளிரு...யுதயவொளி'-நிராதாரமான துவாத சாந்தத்தி னடியிலே யுள்ள சத்தி யென்னுங் கலையானது நூறுயிர கோடி சூரிய ருதய காலத்திலே யுள்ள பிரபை போன் றிருக்கும் ; 'அன்ன தொகை வட்டம்'-சத்தி கலையின் மேலுள்ள வியாபினி கலையானது நூறுயிர கோடி சூரிய வட்டத்தின் பிரபை போன் றிருக்கும்; 'ஞானகாயம்'-வியோமரூபினி யென்னுங் கலையானது ஞானகாயம் போன்றிருக்கும் ; 'அற்றமில் ஞானவாழி'-அனந்தை யென்னுங் கலையானது ஞான சமுத்திரம் போன்றிருக்கும் ; 'ஞானக் கண்ணாடி'-அநாதை யென்னுங் கலையானது ஞானக் கண்ணாடி போன்றிருக்கும், 'அவிர் நூறுயிர கோடி மதியொளி" அநாசிருதை யென்னுங் கலையானது நூறுயிர கோடி பூரண சந்திரப் பிரபை போன்றிருக்கும்; 'அத்தொகையே பெற்ற தினகர வெயில்'-சமனை யென்னுங் கலையானது நூறுயிர கோடி சூரிய ருடைய வெய்யிற் பிரபை போன்றிருக்கும் ; 'மேற் பேச வரு மிருளே'-எல்லாக் கலைகளுக்கு மேலான உன்மனை யென்னுங் கலையானது இருள் போன் றிருக்கும்; 'பிறங்குந்தி...பெறுமே'-இந்தக் கலைகள் பதினாறும் நாபி முதல் முடியின் மேலும் பன்னிரண் டங்குல மிருந்து விளங்கும்.

---

பிரபை-ஒளி. மூலம்-மூலாதாரம்.

மேற் சோடசகலைக்கு நாபிமுதலாகத் துவாதசாந்தம் அளவாக அளவுந் தானமுஞ் சொல்லியது.

அங்குலநா லகாரத்திற் குந்தி மீதே
யடுத்திடுமூன் றிற்கெட்டெட் டாயே நிற்குந்
துங்கமுள நாலினுக்கு மூன்று மூன்றுந்
துலங்கியவோ ரிரண்டினுக்கு நான்கு நான்காந்
தங்கியமே லொன்றுக்கு மூன்றே யாகுந்
தயங்கியமே லொன்றுக்கொன் றாகச் சாற்றும்
பங்கமிலா விவைகடுவா தசாந்த மாகப்
பாங்குபெறு கலைகளெனப் பகரு நூலே. (௨)

'அங்குலநாலு ....குந்திமீதே'-மூலாதாரமுதல் ஸ்வாதிஷ்டான மீறாகப் பன்னிரண்டங்குலம் போக மேலுள்ள நாபியின் மேலே நாலங்குலம் அகார கலைக்குத் தானமாம்; 'அடுத்திடு...நிற்கும்' உகாரம், மகாரம், விந்து ஆகிய இம் மூன்று கலைகளுக்கும் ஒவ்வொன்றுக் கெட்டங்குலம் தானமாய் நிற்கும்; 'துங்கமுள...மூன்றும்'-அர்த்த சந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம் ஆகிய இந் நான்கு கலைகளுக்கும் ஒவ்வொன்றுக்கு மூன்றங்குலந் தானமாய் நிற்கும்; 'துலங்கியவோ...நான்காம்'-சத்திகலை வியாபினிகலை ஒவ்வொன்றுக்குந் தனித்தனி நாலங்குலந் தானமா யிருக்கும்; 'தங்கிய...மூன்றேயாகும்'-சமனை கலைக்கு மூன்றங்குலந் தானமா யிருக்கும்; 'தயங்கிய...சாற்றும்'-உன்மனை கலைக்கு ஓரங்குலந் தானமாய் நிற்கும், 'பங்கமிலா... நூலே'-இந்தப் பன்னிரண்டு கலைகளும் நாபி முதலாக துவாதசாந்த மளவாக இங்ஙனஞ் சொன்ன முறையிலே நிற்கும் என்று ஆகமங்கள் சொல்லு மென்றவாறு.

---

அங்குலம்-ஓர் அளவு.

மேல் அகர முதலான சோடச கலைக்கு வடிவு சொல்லியது.

அகாமுக ரம்மகாம் விந்து நல்ல
வர்த்தசந் திரனிவையவ் வடிவே யாகும்
புகலவரு முக்கோண மிருவிந்து நடுவே
பொருந்துமலம் விந்துவலம் நடுவே விந்து
தகவுடைய திரிசூல மிரண்டு விந்து
சாரும்வியோ மாதிநால் விந்து நான்காய்
நிகழவரு மிருகுச்சி யிரண்டு விந்து
நீடுமொரு விந்துவென நிறுத்து நூலே. (௩)

'அகரம்...வடிவேயாகும்'-அகார கலைக்கு வடிவு அகரலிபி போன்றிருக்கும், உகார கலைக்கு வடிவு உகரலிபி போன்றிருக்கும், மகார கலைக்கு வடிவு மகரலிபி போன்றிருக்கும், விந்து கலைக்கு வடிவு விந்துத் துளி போன்றிருக்கும், அர்த்த சந்திர கலைக்கு வடிவு அர்த்த சந்திரன் போன்றிருக்கும்; 'புகலவருமுக்கோணம்'-நிரோதினி கலைக்கு வடிவு மேலே யொரு மூலையான முக்கோணமா யிருக்கும்; 'இருவிந்து நடுவே பொருந்து மலம்-நாத கலையானது இரண்டு விந்துவும் நடுவே ஒரு கலப்பையுமா யிருக்கும்; 'விந்து வலம்'-நாதாந்த கலையானது வலப் புறத்திலொரு விந்துவும் இடப் புறத்திலே ஒரு கலப்பையுமா யிருக்கும்; 'நடுவே விந்து'-சத்தி கலை யானது நடுவே ஒரு விந்துவும் இரண்டு புறத்திலும் இரண்டு கலப் பையுமா யிருக்கும்; 'தகவுடைய திரிசூல மிரண்டு விந்து'-வியா பினி கலையானது திரிசூலமுமாய் முடியிலே இரண்டு விந்துவுமா யிருக்கும்; 'சாரும்...நிகழவரும்'-வியோமரூபிணி கலையும் அநந் தை கலையும் அநாதை கலையும் அநாசிருதை கலையுமான நான் கும் நான்கு திக்கிலும் ஒவ்வொரு விந்துவா யிருக்கும்; 'இருகுச்சி யிரண்டு விந்து'-சமனை கலையானது இரண்டு குச்சியின் மேலே இரண்டு விந்துவுமா யிருக்கும்; 'நீடுமொரு விந்துவென நிறுத்து நூலே'-உன்மனை கலையானது ஒரு விந்துவா யிருக்கும் என்று ஆகமங்கள் கூறு மென்றவாறு.

## மேற் பதினாறு கலைகளுக்குந் தேவதை கூறியது.

மலரயன்முன் னால்வர்களு மாகு முந்தி
மருவகர மாதியொரு நாலுக் கும்மே
விலகவரு நான்கினுக்குஞ் சதாசிவமே தெய்வ
மெழிலுடைய மேலிரண்டிற் காகதமாஞ் சிவமே
நலமுடைய நான்கினுக்கு நற்பரம சிவமே
நண்ணுமநா கதசிவமே நவிலரிய விரண்டிற்
குலகறிய வைந்துமூன் றிரண்டி ரண்டே
யுள்ளாகு மிரண்டிரண்டிற் கொருநான்கு தானே.

'மலரயன்...நாலுக்கும்' -நாபியிலேயுள்ள அகார கலைக்கும் இருதயத்திலே யுள்ள உகார கலைக்கும் கண்டத்திலே யுள்ள மகார கலைக்கும் புருவ நடுவுள்ள விந்து கலைக்கும் முறையே பிர்மாவும் விஷ்ணுவும், உருத்திரனும், மஹேசுவரனுமான நாலு பேர்களும் அதிதேவதைகளாம்; 'மேலிலக'...தெய்வம்,-அர்த்த சந்திர கலைக்கும் நிரோதினி கலைக்கும் நாதகலைக்கும் நாதாந்த கலைக்கும் சதாசிவமே அதி தேவதையாம்; 'எழிலுடைய...ஆக்தமாஞ்சிவமே'-நிராதாரத் திலுள்ள சத்திகலைக்கும் வியாபினி கலைக்கும் ஆகதசிவமே அதி தேவதையாம்; 'நலமுடைய...பரமசிவமே'-வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதையாகிய நான்கு கலைகளுக்கும் பரம சிவமே அதிதேவதையாம்; 'நண்ணும்...இரண்டிற்கு' -சமனை கலைக்கும் உன்மனைகலைக்கும் அனாகத சிவமே அதிதேவதையாம்; 'உலகறிய வைந்து மூன்றிரண்டிரண்டே' - அகார, உகார, மகார, விந்து, அர்த்த சந்திர னென்னும் ஐந்திற்கும் ஸ்தூல கலைகளென்றும், நிரோதினி, நாதம், நாதாந்தம் என்னும் மூன்றுகலைகளுக்கும் சூக்குமகலைக ளென்றும், சத்தி, வியாபினி என்னு மிரண்டிற்கும் அதிசூக்கும கலைக ளென்றும், சமனை உன்மனை யென்னு மிரண்டிற்-

கும் மகாரத்துக்கும் கலைகளென்றும், பெயராம்; 'உள்ளாகு...நான்கு தானே'-வியோமரூபை சத்தி கலையிலும், அனந்தை வியாபினி கலையிலும் அடங்கும்; அநாதை சமனைகலையிலும், அநாசிருதை உன்மனைகலையிலும் அடங்குமென்றவாறு.

## மேலாதார நிராதாரங்களுக்குங் கலைகளுக்கும் மலநிலை சொல்லியது.

மூலத்தி லோங்கார மசபைக் காக
 மொழிவர்கா மிகமலமேல் முகிழ்க்கு முந்தி
யேலத்தான் மேவகர முன்னி ரண்டிற்
 கிழுக்குமல மேலிரண்டிற் கிலகு மாயை
சீலத்தான் மேலிரண்டிற் றிகழ்மா யேயந்
 திறலுடைய மேலிரண்டிற் சேர்மா மாயை
சாலத்தான் மேலிரண்டிற் றருதி ரோதந்
 தயங்கியமே லிரண்டிற்கா ணவமே சாற்றில். (ரு)

'மூலத்தி...முகிழ்க்கும்'-மூலாதாரத்திலுள்ள ஓங்காரத்திற்கும் அசபைக்குமாக காமிகமல மேல்முகிழ்க்கு மென்று மொழிவார்கள்; 'உந்தியேலத்தான்...இழுக்குமலம்'-அகாரகலைக்கும் உகாரகலைக்கும் ப்ரகிருதி மாயை பொருந்தி நிற்கும்; 'மேலிரண்டிற் கிலகு மாயை' - மகாரகலைக்கும் விந்துகலைக்கும் அசுத்த மாயை பொருந்தி நிற்கும்; 'சீலத்தான்...மாயேயம்'-அர்த்தசந்திர கலைக்கும் நிரோதினி கலைக்கும் சுத்தமாயா காரியமான மாயேயம் பொருந்தி நிற்கும்; 'திறலுடைய...மாமாயை' - நாதகலைக்கும் நாதாந்த கலைக்கும் சுத்த மாயை பொருந்தி நிற்கும்; 'சாலத்தான்...திரோதம்'-சத்திகலைக்கும் வியாபினி கலைக்கும் திரோதமலம் பொருந்தி நிற்கும்; 'தயங்கிய...சாற்றில்'-சமனைக்கும் உன்மனைக்கும் ஆணவ மலம் பொருந்தி நிற்குமென்றவாறு.

---

மூலம் - மூலாதாரம். காமிகம் - காமியம்.

மேலாதார நிராதாரங்களிலுள்ள மலங்களுடனே எண்பத்து நான்கு நூறுயிர யோனி பேதமும் சோதனைப்படும் என்கின்றது.

அரியமூ லாதார மதனின் மேவி
யவிருமோங் காரமெழி லசபைக் காகத்
தெரிவரிய யோனிதா பரமே யாகுந்
திகழுவரு முந்தியின்மே லகா மாதிப்
பிரிவரிய விவ்விரண்டா யறுகூ றாகிப்
பெறும்யோனி யூர்வனவு நீரில் வாழ்கற்
குரியனவும் பறவைகளு நாற்கான்மா னிடரு
முயர்தெய்வ கதியுமென வுரைக்கு நூலே. (சு)

'அரிய... தாபரமே யாகும்' - மூலாதாரத்திலே யிருந்து விளங்கு மோங்காரத்திற்கும் அசபைக்கும் பிரதானமான காமிகமலம் சோதிக்கும்போது தாவரயோனி கக லக்ஷமும் சோதனைப்படும்; 'திகழுவரு... பெறும்' - நாபியிலே பொருந்தும் அகார முதலாக உன்மனை யந்தமாகப் பன்னிரண்டு கலையையும் இவ்விரண்டு ஒவ்வொன்றாகப் பிரித்தால் ஆறு கூறாம்; 'யோனியூர் வனவும்... வுரைக்கு நூலே' - முன் வகுத்த ஆறுகூற்றிலே முதற்கூறாகிய அகாரமும் உகாரமும் ஊர்வன வான யோனிகள் கடு லக்ஷமும் பிரகிருதி மலத்துடனே சோதனைப்படும், இரண்டாங் கூறாகிய மகாரமும் விந்துவும் நீர்வாழ் சாதியான யோனி பத்து நூறுயிரமு மசுத்த மாயையுடனே சோதனைப்படும், மூன்றாங்கூறாகிய அர்த்தசந்திரன் நிரோதினியும் பறவையான யோனி பத்து நூறுயிரமுஞ் சுத்த மாயா காரியமான மாயேய வஸ்துவுடனே சோதனைப்படும், நாலாங்கூறாகிய நாதமும் நாதாந்தமும் நாற் காலியான யோனிபத்து நூறுயிரமுஞ் சுத்த மாயையுடனே சோதனைப்படும், ஐந்தாங் கூறாகிய வியோமரூபினி, அநந்தை, சத்தி

---

மூலாதாரம் - தாவரயோனி, கக லட்சம். வியோமரூபினி - சத்தி, அநந்தை - வியாபினி.

வியாபினி யென்னுங் கலைகள் மானிடயோனி ஒன்பது நூறுயிரா முந் திரோதான மலத்துடனே சோதனைப்படும், ஆறுங் கூறுகிய சமனையும் உன்மனையும் அநாதையும் அநாசிருதையும் தெய்வயோனி பதினொரு நூறுயிராமும் ஆணவ மலத்துடனே சோதனைப்படு மென்று ஆகமங்கள் கூறு மென்றவாறு.

## மேலெல்லாக் கலைகளுக்கும் மாத்திரையுஞ் சட்சூனியமுங் கூறியது.

மூன்றகர மிரண்டுகர மகர மொன்றே
முந்துவிந்து வரைபிறைகால் முக்கோண மரைக்கா
லான்றமைந்த நாதமா காணிநா தாந்த
மரைமாமே வரைக்காணி சத்தியைமுந் திரியை
யேன்றவியா பினியரைக்கா ணியின்கீ ழினரையே
யிம்முறை வியோமாதி யரையரைமாத் திரையே
தோன்றுமக ரத்தின்மே னிரோதசத்தி யின்மேற்
றோற்றும்வியா பினிசமனை யுன்மனைமேற்
[சுன்னே. (எ)

'மூன்றகரம்' - அகாரகலைக்கு மூன்று மாத்திரை; 'இரண்டுகரம்' - உகாரகலைக்கு இரண்டு மாத்திரை; 'மகரமொன்றே' - மகாரகலைக்கு ஒரு மாத்திரை; 'முந்து விந்துவரை'-விந்துகலைக்கு அரை மாத்திரை, 'பிறைகால்' - அர்த்த சந்திரகலைக்குக் கால்மாத்திரை; 'முக்கோண மரைக்கால்' - நிரோதினி கலைக்கு அரைக்கால்; 'ஆன்; றமைந்த நாதம் மாகாணி'-நாதகலைக்கு மாகாணி மாத்திரை; நாதாந்தம் அரைமாமே வரைக்காணி - நாதாந்த கலைக்கு அரைமா வரைக்காணி மாத்திரை; 'சத்தியை முந்திரியை,'-சத்திகலைக்குக் காணி முந்திரி மாத்திரை; ஏன்ற வியாபினி அரைக்காணியின் கீழினரை-வியாபினி, கலைக்கு அரைக்காணியின் கீழரை மாத்திரை. 'இம்முறை வியோமாதியரை யரைமாத்திரையே' - இம்முறை யாக வியோமரூபை முதலான ஆறுகலைகளுக்கும் அதிற்பாதி

அதிற்பாதி மாத்திரையாம்; 'தோன்று...சுன்னே' மகார கலைக்கு மேலே ஒரு சூனியமும், நிரோதினி கலைக்கு மேலே ஒரு சூனியமும், சத்தி கலைக்கு மேலே ஒரு சூனியமும் உண்டு. அன்றியும் வியாபினி கலைக்கு மேலே ஒரு சூனியமும் சமனை கலைக்கு மேலே ஒரு சூனியமும் உன்மனைகலைக்கு மேலே ஒரு சூனியமு முண்டு எல்லாவற்றையுஞ் சொன்னவற்றுள்ளே அடக்கிக் கொள்க.

பிராசாத சட்கம் முற்றிற்று.

ஸ்ரீ குருசரணாரவிந்தாப்பியாந் நம:||

---

**வியாபினி சத்தி-அனந்தை வியாபினி.**

சூனிய மென்பது சுன்னம் அடையாளமாகக் குறிக்கப் பட்டுளது:— O கசு. உன்மனை, O கரு. சமனை, கச. அநாசிருதை, கங. அநாதை கஉ. அநந்தை, கக. வியோமரூபினி, O ய. வியாபினி, O கூ. சத்தி, அ. நாதாந்தம், எ. நாதம், O சு. நிரோதினி, ரு. அர்த்த சந்திரன், ச. விந்து, O ங. மகரம், உ. உகரம், க. அகரம்.